Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# The Culture of Female Protagonist in Sangam Literature

**Dr. R. Suhitha Rani,** Assistant Professor of Tamil Studies,
Manonmaniam Sundaranar University, Tirunelveli.
ORCiD: https://orcid.org/0000-0003-4350-0323
DOI: 10.5281/zenodo.7312555

## Abstract

*Sangam literature is proof of the legend of Tamil. These are the reflections of poets who lived in different environments in different periods and effectively highlight the life of the Tamils. In the Sangam literature, which has duality as akam and Puram, the amount of internalization is more than the amount of externalization. Sangam's literature is full of concentration and sophistication, reflecting the love life and chastity of the ancestors. Leaders play an important role in the movement of the story of Sangam songs. However, the leader is considered very important in the family system. The purpose of this article is to study the culture through the Sangam leader who gets such a special position. Tamil culture is getting changed as time passes. Sangam era people's life is based on morality. Morality means living with love. In this literature, there are so many characters but the female (Thalaivi) protagonist is the important one. The motive of this article is to analyze the cultural components of the female protagonist.*

**Keywords:** Sangam literature, Culture, Hospitality.

## References

[1] Elampuranar. *Tholkappiyam Poruzhathigaram*. KazhagaVeliyidu, SarathaPathippagam, Chennai, 1961.
[2] Ramakrishnan. S. *KiriyavinTharkala Tamil Agarathi*. KiriyaVeliyedu, Chennai, 2000.
[3] Govinthan. K. *Tamizhar Varalaru*. Paari Nilayam, Chennai, 1985.
[4] Saminathaiyar. U.V. *Pathittu Paththu Moolamum Pazhaya Uraium*. Samithaiyar Nool Nilayam. U. V, Chennai, 1980.
[5] Cheyapal.R. *Ahananooru*. New Century Book House, Chennai, 2014.
[6] Nadarasa Pillai. A. Naaladiyar, Tirunelveli Thennindia Saiva Siththantha Noorpathipu Kazhagam, Tirunelveli, 1680.
[7] Nagarajan. V. *Kurunthokai*. New Country Book House, Chennai, 2014
[8] Bala Subramanian. K.V. *Nattinai*. New Century Book House, 2014.
[9] Puliyur Kesigan. Silappathigaram. Ayinthinai Pathipagam, Chennai, 1958.
[10] Viswa Nathan. A. *Kaliththokai*. New Century Book House, Chennai, 2014.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# சங்க இலக்கியத் தலைவியின் பண்பாடு

**முனைவர் ரெ.சுகிதா ராணி,** உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
**ORCiD: https://orcid.org/0000-0003-4350-0323**
**DOI: 10.5281/zenodo.7312555**

**ஆய்வுச்சுருக்கம்**

*மாறிவரும் காலச்சூழலில் தமிழரின் பண்பாடுகளும் மாறி வருகின்றது. சங்க தமிழரின் வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைந்தது. அறம் எனப்படுவது அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையாகும். சங்க இலக்கியங்களில் பல மாந்தர்கள் பேசப்படினும் அவர்களுள் தலைமையிடம் பெறுபவள் தலைவியாவாள். இத்தலைவியின் வழியாகப் பண்பாட்டு கூறுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம், பண்பாடு, விருந்தோம்பல்.

தமிழின் பழம்பெருமைக்கு சான்றாக விளங்குவன சங்க இலக்கியங்கள். பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறுச் சூழல்களில் வாழ்ந்த புலவர்களின் எண்ணச் சிதறல்களாக அமைந்த இவை தமிழரின் வாழ்வியலைத் திறம்பட எடுத்துரைக்கின்றன. அகம், புறம் என இருதிறத்தினைக் கொண்ட சங்க இலக்கியத்தினுள் அகப்பாடல் தொகை புறப்பாடல் தொகையினும் மிகுந்து காணப்படுகின்றது. செறிவும் நுட்பமும் மிக்க இச்சங்க இலக்கியங்கள் தலைமக்களின் காதல் வாழ்வையும், கற்பு வாழ்வையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. சங்க அகப்பாடல்களின் கதை நகர்விற்கு தலைமக்களே முக்கியப்பங்கு வகிக்கின்றனர; எனினும் குடும்ப அமைப்பில் தலைவி மிக முக்கியமாகக் கருதப்படுகின்றாள். அத்தகைய சிறப்பிடம் பெறும் சங்கத் தலைவியின் வழியாக பண்பாட்டை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

மனை வாழ்க்கையில் இல்லத்தின் அரசியாகக் குறிப்பிடப்படும் தலைவி நற்பண்புகளின் திருவுருவமாகத் திகழ்கின்றாள். ‘இல்லத்திற்கு ஒளியூட்டுபவள்’ என்ற முறையில் ‘மனைக்கு விளக்கு’ எனவும், கற்பை மேன்மைப்படுத்துபவள் என்ற பொருள் தரும் வகையில் ‘கற்பு மேம்படுவி’ எனவும் தலைவி குறிக்கப்படுகின்றாள். பெண்மைநலத்தின் சிறப்பை விளக்கும் வகையில் ‘பெண்டு’ எனக் குறிக்கப்படுகிறாள். பெண் பாத்திரங்கள் பல சங்க இலக்கியத்தில் இருப்பினும் ‘பெண்டு’ என்ற சொல் தலைவியை மட்டும் குறிப்பிட பயன்படுத்துவதால் தலைவியின் சிறப்பு மேலும் புலப்படுகின்றது.

பண்பாடு என்ற சொல் பரந்துபட்ட பொருளை உணர்த்துகின்ற சொல்லாகும். ‘பண்படுதல்’ என்னும் சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு என்னும் சொல். பண் என்பது

பாடல் அல்லது இசை எனப் பொருள்படும். ‘படு’ என்பதன் நீட்டல் விகாரமே பாடு ஆகும். படு என்பதற்கு செம்மைப்படுத்துவது என்று பொருள். பண்பாடு என்ற சொல் Culture என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையான பொருளைத் தருகின்றது. மேலும் நல்வழிப்படுத்துதல், பக்குவப்படுத்துதல், திருத்தம் பெறுதல், திருத்துதல் எனப் பல பொருளைப் பண்பாடு என்னும் சொல் தருகின்றது. சங்கத் தமிழர் உயிரினும் மேலாக மதித்துப் போற்றியுள்ள பண்பாட்டைப் பொய்யாமொழிப் புலவர் “பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேன் மண்புக்கு மாய்வது மன்” (குறள். 996) என்னும் குறள் வழியாக விளக்கியுள்ளார். அதாவது பண்புடையவர்கள் வாழ்வதால் தான் இவ்வுலகம் நிலைப்பெற்றுள்ளது என்னும் திருந்தியக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளமைப் பண்பாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. “பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” (கலித்.133.8) எனக் கலித்தொகைப் பாடலொன்று உணர்த்துகின்றது. இதன் மூலம் பண்பாட்டின் சிறப்பினைச் சங்கக் காலத்திலேயே வெளிப்படுத்தியுள்ளமையையும் அறியலாம். “குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் சிந்தனை வெளிப்பாடும்” என க்ரியாவின் தமிழ் அகராதி பண்பாட்டிற்கு பொருள் தருவதும் நோக்கத்தக்கது.

பண்டை தமிழர்கள் பண்பாட்டை நிலைக்களமாய் கொண்டு இல்வாழ்க்கை வாழ்ந்தனர். சிறந்த கணவனைத் தெய்வமாகப் போற்றுவது மகளிரின் பண்பாடு. பிறந்த வீடு செல்வ செழிப்புடையதாக இருப்பினும் புகுந்த வீட்டு வாழ்வையே பெரிதென்று எண்ணுபவர்கள் மகளிர். தலைவி, தலைவனுடன் வாழும் வாழ்வில் வறுமை வந்த போதும், வளம் பொருந்திய தந்தையை நாடிச் செல்லாமல் செம்மையான வாழ்வு வாழ்ந்து அதில் மனநிறைவு கொள்கின்றாள். செல்வமான சூழ்நிலையில் வளர்ந்த தன்மகள் இப்போது வறுமையில் மனநிறைவு கொண்டு இல்லறம் நடத்துதலைக் கண்டு வியக்கின்றாள் செவிலித்தாய். தேன் கலந்த பாலைப் பொன்கலத்தில் ஏந்தி சிறுகோல் எடுத்து உண் எனத் திட்ட, உண்ண மறுத்து சிலம்பு ஒலிக்க ஓடும் சிறு விளையாட்டினை உடையத் தலைவி, தலைவன் வறுமையுற்ற நிலையிலும் பெற்ற தந்தையின் வளமான உணவைப் பற்றி நினைக்காமல் ‘ஓடும் நீரில் நுணுகிக் கிடக்கும் சிறுமணல் போல விட்டு விட்டு ஒவ்வொரு பொழுதும் உண்ணும்’ சிறு வண்மை உடையவளாகி விட்டாள் என்பது எந்நிலையிலும் சிறு பொருள் கொண்டு நிறைவு காணும் சங்கத் தலைவியின் நற்பண்பினை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. “......ஒழுகு நீர் நுணங்கு அறல் போல, பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே” (நற்.110) என்னும் சங்க அகப்பாடல் வரிகள் இதனைச் சுட்டுகின்றது. கணவனுக்கு வரும் வருமானத்திற்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துவது தான் பெருமைக்கு உரிய இல்லற மாண்பு என்னும் பண்பாட்டைப் புலப்படுத்துவதாய் இஃது அமைந்துள்ளது.

‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை’ என்பது பொதுமறை. கணவனையே தனக்கு உயிராகக் கருதுதல் சங்க மகளிரின் இயல்பும்

பண்பாடும் ஆகும். "....வாள்நுதல் மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (குறுந்.135) என்னும் அடிகள் இதனைத் தெள்ளிதின் புலப்படுத்தியுள்ளமை ஈண்டு காணலாம். தலைவனைத் தன் உயிராகக் கொண்ட தலைவி, தலைவன் போர் மற்றும் பொருள் ஈட்டுதல் நிமித்தமாக பிரிந்திருக்கும் பொழுது புனைந்து கொள்ளாமல் அவன் வரவை எதிர;நோக்கி காத்திருந்தாள். மனத்திண்மைக் கொண்ட இத்தகையத் தலைவியைச் சங்க இலக்கியம் "முல்லைச் சான்ற கற்பினர்" (நற்.142:9-11) எனப் போற்றியுள்ளது. அதாவது தலைவன் பிரிந்திருக்கும் போது மங்கல அணி தவிர பிற அணிகலன்கள் எதுவும் இன்றி 'புனையா ஓவியமாக' இருந்துள்ளனர் என்ற பதிவும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் தலைவியின் அழகும் அலங்காரமும் தலைவனுக்காக என்ற பண்பாட்டு நிலை இருந்துள்ளமையும் தெளிவாகின்றது. இக்கருத்தை மெய்பிப்பதாக "மண்ணாவயின் மணம் கமிழ் கொண்டு" (பதி.பத்து.21.33) என்னும் வரிகள் அமைந்துள்ளதைக் காணலாம். மேலும் "காவலன் நாடு காவற்கும் வினை செய்வதற்கும் பிரிந்தவழிக் கற்புடை மகளிர் தம்மையொப்பனை செய்து கொள்ளாராகலின்" என்னும் உரையும் இதனைத் தெளிவுப்படுத்துகின்றது. (கா.கோவிந்தன், தமிழர; வரலாறு, ப.73-74)

இல்வாழ்க்கைப் பண்பாடு என்பது அனைவரிடமும் அன்பு காட்டி நல்லறம் செய்வதாகும். தலைவனுடன் மிகுந்த அன்பு கொண்ட தலைவி, தலைவனிடம் கொண்ட அன்பு பிறவிதோறும் தொடர வேண்டும் என விரும்புகின்றாள். "இம்மை மாறி மறுமை ஆயினும், நீ ஆகியர் எம் கணவனை" (குறுந்.49) என்னும் அடிகள் வழியாக இக்கருத்தைக் கண்டுணர முடிகின்றது. இதிலிருந்து சங்க தலைவி தலைவனுடன் கொண்ட அன்பில் வழுவாமல் அவனையே உயிரெனக் கொண்டு வருமானத்துக்குத் தக்கதொரு இல்வாழ்க்கை வாழும் பண்பாட்டை மேற்கொண்டிருந்தாள் என்பதை அறியமுடிகின்றது. இத்தகைய இல்வாழ்க்கைப் பண்பாட்டைக் கொண்ட தலைவி 'தனக்கு இல்லையென்றாலும் தன்னை நாடி வந்த விருந்தினரை உபசரிப்பது தமிழர் பண்பாடு' என்ற கூற்றுக்கு இணங்க விருந்தோம்பல் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியுள்ளாள். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறும்போது விருந்தோம்பற் பண்பாட்டையும் சேர;த்துக் கூறியுள்ளார். "விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" (தொல்.பொருள்.களவு.நூற்.11) என்னும் நூற்பா இதனை உணர்த்தும். மேலும் விருந்தினர் திடீரென வந்தாலும் அவர்களை விருந்தோம்பும் பண்பு மகளிர்க்கு இருந்ததைப் "புகா அக்காலை புக்கு எதிர்பட்டுழிப், பகாஅ விருந்தின் பகுதிக்கண்ணும்" (தொல்.பொருள்.நூற்.1053) என்னும் நூற்பா எடுத்துக்காட்டுகின்றது.

அதேபோன்று விருந்தோம்பலுக்கென தனித்ததோர் அதிகாரம் வகுத்தப் பொய்யாமொழிப் புலவர், "அகன் அமர;ந்து செய்யாள் உறையும் முகன் அமர;ந்து,நல் விருந்து ஓம்புவான் இல்" (குறள்.84) எனக் குறிப்பிட்டுள்ளார். தன்னை நாடிவரும் உறவினரை மலர்ந்த முகத்துடன் வரவேற்று உபசரிக்க வேண்டும். அப்போது தான் வீட்டில் செல்வம் குடிபெயரும் என்றுரைக்கின்றார். இவையன்றி அன்பு உடையவரால் சமைத்து உண்ணப்படும் கீரையானது,

உள்ளன்பு அற்றவரால் அளிக்கப்படும் ஊன் உணவை விட அமிர்தம் போன்று சுவையாக இருக்கும் என விருந்தோம்பல் பண்பாட்டைப் பற்றிக் கூறியுள்ளார். மேற்சுட்டிய கருத்தை, "…விழுமிய குய்த்தவை ஆர் வெண்சோறே ஆயினும், மேவாதார் கைத்துண்டல் காஞ்சிரங்காய்" (நாலடி.22) என்னும் அடிகள் உணர்த்தியுள்ளன. இத்தகைய புகழ்மிக்க விருந்தோம்பல் பண்பு, இல்லத் தலைவியையே சார்ந்திருந்தது. வெளியூரிலிருந்து வருவோர் மாலைப்பொழுது வந்துவிட்டால் ஓர் ஊரில் தங்கி மறுநாள் காலையில் பயணத்தைத் தொடர்வது பழங்கால வழக்கம். அவ்வாறு வீட்டுத் திண்ணையில், மாலைக்காலத்தில் வந்துத் தங்கும் புதியவரை அவ்வூரில் உள்ளவர்கள் அன்போடு உணவு அளித்து உபசரிப்பர். இத்தகைய விருந்தோம்பல் பண்பாடு இல்வாழ்க்கையில் தலைவியின் கடமையாகப் போற்றப்பட்டுள்ளமையை, "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும், முல்லை சான்ற கற்பின், மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே" (நற்.142) என்னும் பாடல் வழியாகக் கண்டுணர முடிகின்றது.

இரவு நேரத்தில் விருந்து வந்தாலும் உவப்பவள் எனனுடைய தலைவி. அவள் என் சொல் கேட்டு இல்லிலிருந்து நல்லறம் செய்யும் கற்பினையும், மென்மையான இயல்பினையும், இளமையையும் உடையவள் எனத் தலைவியின் விருந்துபசரிக்கும் பண்பாட்டை எடுத்துரைக்கின்றான் தலைவன். இத்தகைய விருந்துபசரிக்கும் பண்பாட்டுக்கெனச் சில அறங்களும் கடைபிடிக்கப்பட்டன. விருந்துபசரிக்கும் போது தலைமக்கள் இணைந்தே உபசரித்தல் மரபு. "விருந்து காணும் போது என்னுறுமோ என்று விம்மும்" (கம்ப.சுந்தர.வந்தனைப்படலம்.15) என அசோகவனத்து இருந்த சீதை வருந்தியமையும், கோவலற் பிரிந்த காலத்து கண்ணகி, "விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (சிலம்பு. அடைக்கலக்காதை73) எனக் கூறியமையும் விருந்தோம்பல் பண்பாட்டுக்குத் தக்கச் சான்றுகளாக அமைந்துள்ளன. இவ்வாறு விருந்தோம்பல் பண்பாட்டில் இணைந்திருக்கும் தலைமக்கள், தங்களுக்குள் ஊடல் தோன்றுவதற்கு இடமே இல்லை. காரணம் எங்களுடைய வீட்டில் அதிகமான விருந்தினர்கள் எப்பொழுதும் தங்கியிருப்பார்கள். அவர்களை உபசரிப்பதிலேயே நேரம் செல்கின்றது எனக் கூறியுள்ளமையையும் காணலாம். "நன்மனை நனிவிருந்து அயரும், கைதூவின்மையின் எய்தாம் ஆறே" (நற்.280) என்னும் வரிகள் மேற்கண்ட கருத்துக்கு அரண் சேர்கின்றன. மேலும் ஊடியிருக்கும் போது ஊடல் தீர்க்கும் வாயிலாகவும் விருந்து கூறப்பட்டுள்ளமையைச் "சிறுதாழ் செறித்த மெல்விரல்" (நற்.120) என்னும் நற்றிணைப் பாடலடிவழி அறியமுடிகின்றது. தலைவனுடன் ஊடியிருக்கின்றாள் தலைவி. சமைத்து கொண்டிருக்கும் அவள் முகத்தில் மலர்ச்சியில்லை. அப்பொழுது தலைவன் 'என் வீட்டிற்கு விருந்தினர் வருக. விருந்தினரைக் கண்டால் இவளுடைய சிவந்த முகம் மாறும். முகத்திலே புன்சிரிப்பு காணப்படும். அதைக்கண்டு நானும் மகிழலாம் எனக் கூறுவதிலிருந்து விருந்தினரைக் கண்டால் முகமலர்ந்து வரவேற்கும் தலைவியின் சிறந்த பண்பாட்டை அறியலாம்.

கடமைகளை முடித்து திரும்பி வரும் தலைவன் தன்னுடன் விருந்தினரை அழைத்து வருவதும், தலைவனும் தலைவியும் உடனிருந்து அவ்விருந்தினரைப் போற்றிப் பேணுவதனையும் *தொல்காப்பியம்*, "அருந்தொழில் முடித்த செம்மற் காலை, விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்" (தொல்.பொருள்.கற்.நூற்.144) என்னும் நூற்பா உணர்த்தியுள்ளது. இஃதன்றி விருந்தோம்பல் பண்பாட்டில் சிறந்திருந்த தலைவிக்கு விருந்தெதிர் கொள்ள துணையாக பொருளீட்டி வரும் தலைவன் விரைந்து தேரைச் செலுத்த கூறும் நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளன. "செல்க தேரே… பெருந்தோள் நுணுகிய நுசுப்பின் திருந்து இழை, அரிவை விருந்து எதிர் கொளவே" (அகம்.374) என்னும் பாடலடிகள் இதனை உணர்த்துகின்றன. இதிலிருந்து இல்லறத்தில் விருந்தோம்புதல் பண்பாடு சிறந்திருந்தது எனவும் அறியலாம். மேலும் அகநானூற்றில் 324, 384 ஆகிய பாடல்களும் இப்பண்பாட்டுக்கு சான்றாக அமைந்துள்ளன.

உலகப் பண்பாடுகளில் மிக உயர்ந்த பண்பாடாக விளங்குவது தமிழர் பண்பாடு. உலகிற்கே எடுத்துக்காட்டாய் திகழும் இப்பண்பாட்டை சங்க இலக்கியங்கள் தெளிவுப்படுத்துகின்றன. காலம் மாற மாற பண்பாடும் மாறுபட்டு வருகின்றது. இல்வாழ்க்கையில் கருத்து வேறுபாடுகளும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமல் இருப்பதும் இன்றைய சூழ்நிலையில் பெருகி வருகின்றது. ஆனால் சங்க காலத்தில் விருந்தினரைப் போற்றுதல் மிகச்சிறந்தப் பண்பாடாகக் கொள்ளப்பட்டது. விருந்தினர் என்றால் 'புதியவர்' எனக்கொண்டு விருந்தோம்பினர் சங்ககால தலைவியர். தற்போது விருந்தினர் என்றால் குடும்பத்தினர் என்னும் அளவிற்கு பண்பாடு மாறியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

**பயன்பட்ட நூல்கள்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. கழக வெளியீடு, சாரதா பதிப்பகம், சென்னை, 1961.

[2] எஸ். இராமகிருஷ்ணன். *க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி*. க்ரியா வெளியீடு, சென்னை, 2000.

[3] கா. கோவிந்தன். *தமிழர் வரலாறு*. பாரி நிலையம், சென்னை, 1985.

[4] உ.வே. சாமிநாதையர். *பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்*. உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1980.

[5] இரா. செயப்பால். (உ.ஆ.), *அகநானூறு (தொகுதி - 1, 2)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

[6] அ. நடராசபிள்ளை. *நாலடியார்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி, 1960.

[7] வி. நாகராஜன். *குறுந்தொகை* (தொகுதி - 1, 2). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

[8] வெ. பாலசுப்பிரமணியன். (உ.ஆ.). *நற்றிணை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
[9] புலியூர்க்கேசிகன். (உ.ஆ.). *சிலப்பதிகாரம்*. ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1958.
[10] அ. விசுவநாதன். (உ.ஆ.). *கலித்தொகை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.